18.12.15

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## அணை திறந்து 18 நாளாகியும் நீர்மட்டம் குறையவில்லை: சண்முகாநதி பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி

உத்தமபாளையம்:சண்முகாநதி அணை திறக்கப்பட்டு 18 நாட்களை கடந்தபிறகும், அணையின் நீர்மட்டம் தொடர்ந்து முழு கொள்ளளவில் இருப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். தேனி மாவட்டத்தில் கடந்த வாரம் பெய்த தொடர் மழையால், அணைகள் நிரம்பி வழிந்தன. அதில் ஒன்றான சண்முகாநதி அணை முழு கொள்ளளவான 52.5 அடியை எட்டியது. இதனால், கடந்த நவ., 30 ல் அணை திறக்கப்பட்டது. அணையின் இருந்தது. அணையில் இருந்து விநாடிக்கு 14.7 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

அதன்பிறகும் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக உயர்ந்து 100 கனஅடியை தொட்டது. கடந்த சில நாட்களாக மழை இல்லாததால் தற்போது நீர்வரத்து குறைந்து, வினாடிக்கு 14 கனஅடியாக உள்ளது. அதே அளவு அணையில் இருந்து தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

இதனால், அணையில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து விடப்பட்டு 18 நாட்களை கடந்தும், அணையின் நீர் மட்டம் தொடர்ந்து முழு கொள்ளளவான 52.5 அடியாகவே உள்ளது. இதனால், இன்னும் 120 நாட்களுக்கு தண்ணீர் விவசாயத்திற்கு திறந்து விடுவது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதன்மூலம் இப்பகுதியில் உள்ள 1,640 ஏக்கர் பரப்பு நிலங்கள் பாசன வசதி பெறுகிறது. மேலும், இப்பகுதியில் உள்ள தோட்டங்களில் உள்ள கிணறுகளில் நீர்மட்டம் அதிகரித்துள்ளது.

இது குறித்து விவசாயிகள் கூறுகையில், "அணை திறக்கப்பட்டு 18 நாட்களை கடந்து விட்ட நிலையில், முழு கொள்ளளவில் நீடிக்கிறது.

கடந்த 2004 ல் அணை திறக்கப்பட்ட பிறகு 2010 ல் மட்டும் முழு கொள்ளளவு சில நாட்கள் நீடித்தது. அதற்கு பிறகு இந்த ஆண்டும் முழு கொள்ளளவு தொடர்ந்தாற்போது 18 நாட்கள் நீடித்துள்ளது. இது விவசாயிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது,' என்றனர்.

## மழை ஓய்ந்ததால் அறுவடை பணி தீவிரம் கூடலூர் நெல் விவசாயிகளுக்கு நிம்மதி

கூடலூர்: கூடலூாரில் பத்து நாட்கள் தாமதமாக நெல் அறுவடை பணி துவங்கியது. கூடலூர் பகுதி விவசாயிகள், பருவமழை காலங்களில், வயல்களில் நெல் பயிரிட்டு, பயனடைந்து வருகின்றனர். நடப்பாண்டு, பயிரிட்டுள்ள நெல் அறுவடைக்கு தயாரான நிலையில், தொடர் மழை பெய்ததால், வயல்களில் களம் அமைத்து, நெல் அறுவடை செய்ய முடியாமல் விவசாயிகள் சிரமப்பட்டு வந்தனர். இதனால், நஷ்டம் ஏற்படும் சூழல் ஏற்பட்டது. இந்நிலையில், கடந்த சில நாட்களாக மழை இல்லாததால், நேற்று முதல், இயந்திரம் மூலம், நெல் அறுவடை செய்யும் பணிகள் நடந்து வருகின்றன.

விவசாயிகள் கூறுகையில், 'பருவ மழை காலம் தொடர்ந்ததால், அறுவடைக்கு தயாரான நெல் மணிகள் உதிர துவங்கின. கடந்த இரண்டு நாட்களாக வெயிலான காலநிலை நிலவுதால், அறுவடை பணியில் ஈடுபட்டு வருகிறோம்' என்றனர்.

## உரத்தட்டுப்பாடு இல்லை: விவசாய அதிகாரி

திண்டுக்கல்:"தமிழகத்தில் உரம் தட்டுப்பாடு இல்லை' என, திண்டுக்கல் வேளாண் இணை இயக்குனர் சம்பத்குமார் தெரிவித்தார்.அவர் தெரிவித்ததாவது: பருவ மழை பெய்து வருவதால், பல்வேறு பகுதிகளில் விவசாய பணிகள் மும்முரமாக நடக்கின்றன. பயிர் விளைச்சலுக்கு தேவையான உரங்கள் தட்டுப்பாடின்றி விவசாயிகளுக்கு கிடைக்க அரசு நடவடிக்கை மேற்கொண்டது. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தேவையான உரங்கள் இறக்குமதி செய்யப்பட்டு வருகின்றன. திண்டுக்கல்லில் யூரியா 3455 டன், டி.ஏ.பி 1993 டன், பொட்டாசியம் 1495 டன், காம்ப்ளக்ஸ் 3336 டன், சூப்பர் பாஸ்பேட் 317 டன் உரங்கள் என மொத்தம் 10 ஆயிரத்து 596 டன் உரங்கள் இருப்பில் உள்ளன, என்றார்.

## வேளாண் துணை இயக்குனர் ரிஷிவந்தியம் பகுதியில் ஆய்வு

ரிஷிவந்தியம்: ரிஷிவந்தியம் பகுதியில் ஏற்பட்ட வெள்ள பாதிப்புகளை, மாநில திட்ட வேளாண் துணை இயக்குனர் ஆய்வு செய்தார். ரிஷிவந்தியம் பகுதியில் பெய்த பலத்த மழை காரணமாக தொழுவந்தாங்கல், ஏந்தல், பாக்கம், வாணாபுரம் உள்ளிட்ட கிராமங்களில் விவசாய நிலங்கள் சேதமடைந்தது. இப்பகுதியில் சேதமடைந்த நெல், உளுந்து, சோளம், பருத்தி ஆகிய பயிர்களை மாநில திட்ட வேளாண் துணை இயக்குனர் ராமலிங்கம் நேரில் ஆய்வு செய்தார். தொடர்ந்து வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் தொழுவந்தாங்கல் கிராமத்தை சேர்ந்த ரவி என்பவருக்கு மானிய தள்ளுபடி விலையில் நெல் நடவு இயந்திரத்தை வழங்கினார். ரிஷிவந்தியம் வேளாண் உதவி இயக்குனர் தாமோதரன், வேளாண் அலுவலர் ஆனந்தன், உதவி

அலுவலர் ராமச்சந்திரன், சேகர், செந்தில்குமார், சண்முகம், சேகர், சுகுமார் ஆகியோர் உடனிருந்தனர்.

**வடகிழக்கு பருவ மழையால் செழித்து வளர்ந்துள்ள மஞ்சள்**

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த தொடர் மழையால், சொட்டு நீர் பாசனம் மூலம் பயிரிடப்பட்டுள்ள மஞ்சள் செழித்து வளர்ந்துள்ளது. கள்ளக்குறிச்சி, சின்னசேலம், கச்சிராயபாளையம், சங்கராபுரம் உள்ளிட்ட பகுதிகளில் ஆண்டுதோறும் 3,000 ஏக்கர் பரப்பளவில் மஞ்சள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. ஒரு குவிண்டால் மஞ்சள் ரூ.14 ஆயிரம் முதல் ரூ.17 ஆயிரம் வரை விற்பனையாகிறது. அதிக லாபம் கிடைப்பதால் மஞ்சள் சாகுபடியில், இப்பகுதி விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். கள்ளக்குறிச்சி பகுதியில் கடந்தாண்டு பருவமழை பொய்த்து போனதால் அணைகள், ஏரிகள், குளங்கள் போன்ற நீர் நிலை பகுதிகள் வறண்டு கிடந்தது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் நாளுக்கு நாள் குறைந்து. தற்போது கிணற்று நீர்பாசனம் மூலம் பல்வேறு வகையான பயிர்களை விவசாயிகள் சாகுபடி செய்தனர். அதேபோல் மஞ்சள் சாகுபடியிலும் விவசாயிகள் ஆர்வம் காட்டினர். ஓராண்டு பயிரான மஞ்சளுக்கு தண்ணீர் தேவை அதிகமாக உள்ளது. தற்போது பெய்த வடக்கிழக்கு பருவ மழையால் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்தது. இருப்பினும், தண்ணீரை சேமிக்கும் வகையில் சொட்டு நீர் பாசனம் அமைத்து சாகுபடி செய்துள்ள மஞ்சள் பயிர்கள் செழித்து வளர்ந்துள்ளது. ஒரு ஏக்கருக்கு 10 முதல் 15 குவிண்டால் வரை மஞ்சள் மகசூல் கிடைக்கிறது. இங்கு அறுவடை செய்யப்படும் மஞ்சளை ஈரோடு, சேலம், நாமகிரிபேட்டை, ஆத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள நிறுவனத்தினர் மற்றும் மொத்த வியாபாரிகள் நேரடியாக வந்து கொள்முதல் செய்கின்றனர்.

## பத்து ஆண்டுகளுக்கு பிறகு மலைக்கோட்டாலம் ஏரி நிரம்பியது

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி அடுத்த மலைக்கோட்டாலம் ஏரி கடந்த 10 ஆண்டுகளுக்குப்பின் முழுவதுமாக நிரம்பியது. கள்ளக்குறிச்சி பகுதியில் பெய்த வடகிழக்கு பருவ மழையால் அணைகள், ஏரிகள் உள்ளிட்ட நீர்நிலைகள் நிரம்பி வருகிறது. கோமுகி, மணிமுக்தா அணைகளும் முழு கொள் ளளவை எட்டி உபரி நீர் வெளியேற்றப் படுகிறது. கடந்த 10 ஆண்டுகளாக வறண்டு கிடந்த மலைக்கோட்டாலம் ஏரியில், நீர் நிரம்பி கோடி வழியாக உபரி நீர் வெளியேற்றப்பட்டது. கோமுகி அணையிலிருந்து நீர் வெளியாகி சடையம்பட்டு அருகேயுள்ள தடுப்பணை வழியாக தென்கீரனூர், ஏமப்பேர், தச்சூர் ஏரிகள் நிரம்பி வரத்து கால்வாய் வழியாக மலைக்கோட்டாலம் ஏரிக்கு வந்தடைகிறது. இதனால் 97.64 ஹெக்டேர் (240 ஏக்கர்) பரப்பளவு கொண்ட இந்த ஏரியில் 22.19 மில்லியன் கனஅடி அளவுக்கு நிரம்பியுள் ளது. இதன் மூலம் பாசனம் பெறும் 237 ஏக்கர் ஆயக்கட்டு பாசன விவசாய நிலங்கள் நீராதாரம் பெறும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக வறண்டு கிடந்த ஏரி முழுமையாக நிரம்பியதால், இப்பகுதி விவசாயிகள், உற்சாகத்துடன் சாகுபடி பணியை துவக்கியுள்ளனர்.

## ஊடுபயிராக உளுந்து பயிர்

கள்ளக்குறிச்சி: கள்ளக்குறிச்சி அடுத்த நீலமங்கலம் பகுதியில் எண்ணெய் பனையுடன் விவசாயிகள் ஊடுபயிராக உளுந்து சாகுபடி செய்துள்ளனர். கள்ளக்குறிச்சி பகுதியில் சில விவசாயிகள் எண்ணெய் பனை சாகுபடி செய்து வருகின்றனர். மிக நீண்ட கால பயிரான எண்ணெய் பனையுடன் குறைந்த மாத பணப் பயிரான உளுந்தை, ஊடுபயிராக சாகுபடி செய்

வதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். இரட்டிப்பு லாபம் கிடைப்பதால் குறைந்த மாதத்தில் அறுவடை செய்யக்கூடிய பயிர்களை ஊடுபயிராக செய்தனர். தற்போது கீரை வகையினையும் ஊடுபயிராக பயிரிட்டு வருகின்றனர். கள்ளக்குறிச்சி அடுத்த நீலமங்கலம் பகுதியில் எண்ணெய் பனைக்கு ஊடுபயிராக உளுந்து பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது.

**"பண்ணை குட்டைகளில் வாத்து வளர்க்கலாமே'**

அவலூர்பேட்டை: விவசாயிகளின் வருவாய் அதிகரிக்கும் வகையில் பண்ணை குட்டைகளில் மீன், வாத்து ஆகியவற்றை வளர்க்க அதிகாரிகள் ஆலோசனை வழங்க வேண்டும் . மேல்மலையனூர் ஒன்றியத்தில் உள்ள அவலூர்பேட்டை, சாத்தாம்பாடி மற்றும் மேல்மலையனூர் வருவாய் கிராமங்களில் மாவட்ட நீர்வடிப்பகுதி மேம்பாட்டு முகமை திட்டத்தின் கீழ் தனி நபர்கள் 70 பண்ணை குட்டைகள் அமைத்துள்ளனர். இது தவிர கால் நடைகளுக்கான பொ து குட்டைகளும் உள்ளன. முன்னர் கிராமங்களில் இருந்த நீர் தேங்கும் குட்டைகள் ஆக்கிரமிப்புகளில் சிக்கி மறைந்தது. இதனால் பல இடங்களிலும் நீர் சேமிக்கும் வகையில் குட்டைகள் தேவை என கருதி, மாநில அரசு இந்த திட்டத்தை அறிமுகப்படுத்தியது. பண்ணை குட்டைகள் பொதுவாகவும் அமைக்கலாம், பட்டா நிலங்களிலும் தனி நபர்களும் அமைக்கலாம். வீணாகி ஓடும் மழைநீர் இந்த குட்டைகளில் சேமிக்கப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் உயருகிறது. தற்போது பொழிந்த தொடர் மழையினால் பல இடங்களிலும் பண்ணை குட்டைகள் நிரம்பி உபரி நீர் வெளியேறும் நிலை ஏற்பட்டுள்ளது. இதன் மூலம் கிணறுகளில் தண்ணீரின் அளவும் அதிகரித்துள்ளது. காட்சிப் பொருளாக உள்ள இந்த குட்டைகளில் விவசாயிகள் மீன், வாத்து ஆகியவற்றை வளர்த்தால் கூடுதலாக வருமானத்தை அதிகரிக்க செய்யலாம். இதற்கு துறை சார்ந்த அதிகாரிகள் கிராம பகுதிகளில் விவசாயிகளை சந்தித்து

ஆலோசனைகளை வழங்கிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**கரூர் மாவட்டத்தில் 1,544 குளங்களில் 4,160 கனஅடி மழை நீர் சேகரிப்பு**

கரூர்: கரூர் மாவட்டத்தில், மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் சீரமைக்கப்பட்ட, 1,544 குளங்களில் 4,160 கனஅடி மழைநீர் சேகரிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டம், புங்கம்பாடி கிழக்கு பஞ்சாயத்தில் கலெக்டர் ஜெயந்தி ஆய்வு மேற்கொண்டார். பஞ்சாயத்தில் அமைக்கப்பட்டுள்ள பண்ணை குட்டையை பார்வையிட்ட பின் கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது: கரூர் மாவட்டத்தில், தண்ணீர் பற்றாக்குறையை சமாளிக்க, விவசாய நிலப்பகுதியில் பண்ணை குட்டைகள் அமைத்து, மழை தண்ணீர் சேமிக்கப்படுகிறது. தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக, 2013 முதல் 2014ம் ஆண்டு வரை, 7.46 லட்சம் மனித சக்திகளை கொண்டு, 8 கோடியே, 20 லட்சத்து, 42 ஆயிரம் ரூபாய் மதிப்பில், 140 குளங்களில் மேம்பாட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டது. கரூர் மாவட்டத்தில், எட்டு பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட, 157 பஞ்சாயத்துகளில், 108 பாசன குளங்கள், 1,544 சிறு பாசன குளங்கள் உள்ளன. இதன் மொத்த பரப்பளவு, 5,990 ஹெக்டேர். இதன் மொத்த கொள்ளளவு, 16 ஆயிரத்து, 320 கன அடி. இந்த நீர் நிலைகளில் பண்ணை குட்டைகள் அமைக்கப்பட்டு, தற்போது பெய்த வடகிழக்கு பருவமழை காரணமாக, 4,160 கனஅடி மழைநீர் சேகரிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், நிலத்தடி நீர் செறிவூட்டப்படுவதால் எதிர்வரும் ஆண்டில், 10 ஆயிரம் ஏக்கர் பரப்பளவிலான தரிசு நிலங்களில் விவசாயப் பணிகளை மேற்கொள்ள பயனுள்ளதாக இருக்கும். இலவசமாக பண்ணை குட்டைகள் அமைத்திடும் வகையில், 2013-14 மற்றும் 2014-15ம் ஆண்டில் அனைத்து பஞ்சாயத்து யூனியன்களில், 704 பண்ணைக் குட்டைகள் அமைக்கப்பட்டுள்ளது. குளித்தலை மற்றும்

கிருஷ்ணராயபுரம் பஞ்சாயத்து யூனியனுக்குட்பட்ட, 102 பண்ணை குட்டைகளில் முழு கொள்ளளவு மழைநீர் நிரம்பியுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

## 12 டன் மாட்டு தீவனம் கடலூருக்கு பயணம்

கரூர்: கரூர் கலெக்டர் அலுவலகத்தில், தமிழ்நாடு கால்நடை உதவி மருத்துவ சங்கம் சார்பில், கடலூர் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு, மாட்டு தீவனங்கள் இரண்டு லாரிகளில் அனுப்பி வைக்கப்பட்டது. கரூர் கலெக்டர் ஜெயந்தி கூறியதாவது: இங்கு, 2.16 லட்சம் ரூபாய் மதிப்பில், 12 டன் அடர் மாட்டுத்தீவனங்களை அதிகளவில் கால்நடைகள் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு அனுப்பப்படுகிறது. தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் கொடையாளர்கள் தீவனங்கள் அளிக்க முன்வர வேண்டும். வழங்க முன்வருவோர், 9578781181 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அவர் கூறினார். கால்நடை பராமரிப்புத்துறை இணை இயக்குனர் பழனிவேல் உட்பட பலர் பங்கேற்றனர்.

## விவசாயிகளுக்கு ரூ.1.70 லட்சம் இழப்பீடு

தேனி:தேனி மாவட்டத்தில் சமீபத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையின் போது, போடி, பெரியகுளம் பகுதிகளில் விவசாயிகளின் விளை நிலங்கள் சேதமாகின. பருவமழையில் பாதிக்கப்பட்ட விவசாயிகள் உரிய ஆதாரங்களுடன் மனுக்கொடுத்து நிவாரணம் கோரினர். பயிர் சேதம் குறித்து அதிகாரிகள் கள ஆய்வு நடத்தி அரசுக்கு அறிக்கை சமர்ப்பித்தனர். இதன்படி தேனி மாவட்டத்தில் 100 ஏக்கருக்கு மேல் பயிரிடப்பட்டிருந்த நெல், சோளம், நிலக்கடலை, சிறுதானியம் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டிருந்தது. தற்போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு அரசு நிவாரணம் வழங்கி உள்ளது.

இதில் மணியம்பட்டியில் 27 ஏக்கரில் நிலக்கடலை சாகுபடி செய்த12 விவசாயிகளுக்கு ரூ.80 ஆயிரமும், 20 ஏக்கரில் தட்டப்பயறு சாகுபடி செய்த 6 பேருக்கு ரூ.60 ஆயிரமும், பத்து ஏக்கரில் சோளம் சாகுபடி செய்த 3 பேருக்கு ரூ.30 ஆயிரம் வீதம் இழப்பீடு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இந்த நிவாரண தொகை தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கள் மூலம் சம்மந்தப்பட்ட விவசாயிகளின் வங்கி கணக்குகளுக்கு அனுப்பட உள்ளது.

**நெற்பயிரில் இலைக்கருகல் நோய் :விவசாயத்துறை ஆலோசனை**

கம்பம்:கம்பம் பள்ளத்தாக்கில் சாகுபடி செய்துள்ள நெல் பயிரில் இலைச்சுருட்டுப் புழு தாக்குதல் மற்றும் பாக்டீரியா தாக்குதல் போன்றவற்றை கட்டுப்படுத்த கம்பம் விவசாயத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.கம்பம் விவசாயத்துறை உதவி இயக்குநர் அசோகன் கூறியதாவது: "இலைச்சுருட்டுப் புழுவை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட அளவை விட அதிகமாக யூரியா உபயோகிக்க கூடாது. முட்டை ஒட்டுண்ணி டிரைகோகிராமா கைலோனிசை நட்ட 15 ம் நாளிலிருந்து ஒரு எக்டருக்கு ஒரு லட்சம் என்ற அளவில் 5 முதல் 6 தவணைகளில் 7 முதல் 10 தவணை இடைவெளிகளில் விட வேண்டும். 5 சதவீத வேப்பங்கொட்டை சாறு தெளிக்க வேண்டும். லேம்டா சைகோலத்ரின், கார்டேப் ஹைக்ட்ரோகுளோரைடு, பிப்ரோனில், இண்டோஸ்கார்ப் இதில் ஏதாவது ஒரு மருந்தை தெளிக்க வேண்டும். பாக்டீரியா இலைக்கருகல் நோயை கட்டுப்படுத்த பரிந்துரைக்கப்பட்ட யூரியாவை நான்கு முறையாக பிரித்து மேலுரமாக இட வேண்டும். யூரியாவை ஜிப்சம் மற்றும் தூள் செய்த வேப்பம் புண்ணாக்குடன் 5:4:1 என்ற விகிதத்தில் கலந்து ஒருநாள் வைத்திருந்து மறுநாள் மேலுரமாக இட வேண்டும். 5 சதவீத வேப்பகொட்டைச் சாறு அல்லது 3 சத வேப்பஎண்ணெய் கரைசலை நோய் தொற்றும் தருணத்திலும், மீண்டும்

10 நாள் இடைவெளியிலும் தெளிக்கலாம். ஸ்ட்ரெப்டோமைசின் சல்பேட் 300 கிராம் மற்றும் காப்பர் ஆக்சிகுளோரைடு ஒரு கிலோ என்ற அளவில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். இவ்வாறு கூறியுள்ளார்.

**தேங்காய் விலை உயருகிறது**

ஆண்டிபட்டி:தேங்காய்களுக்கான தேவை அதிகரித்து வருவதால், விலை தொடர்ந்து உயர்ந்து வருகிறது. ஆண்டிபட்டி பகுதிக்கு வருஷநாடு, மயிலாடும்பாறை, கடமலைக்குண்டு உள்ளிட்ட மலைக்கிராமங்கள் மற்றும் பாலக்கோம்பை, ராயவேலூர்,தெப்பம்பட்டி, அழகாபுரி ஆகிய பகுதிகளில் இருந்து தேங்காய்கள் விற்பனைக்கு வருகின்றன. இப்பகுதிகளில் கடந்த சில ஆண்டுகளாக ஏற்பட்ட தொடர் வறட்சி, நோய் தாக்குதல் போன்ற காரணங்களால், தென்னை மரங்கள் பாதிக்கப்பட்டு மகசூல் குறைந்தது. தற்போது கம்பம், சின்னமனூர், பெரியகுளம், போடி பகுதிகளில் இருந்து வரும் தேங்காய்கள் தான், ஆண்டிபட்டி உட்பட தேனி மாவட்டத்தின் தேவைகளை பூர்த்தி செய்கிறது. விலை ஏற்ற, இறக்கமாக இருந்து வந்த தேங்காய்கள், கடந்த சில நாட்களாக ஏறுமுகத்தில் உள்ளது. தற்போது மார்கழி மற்றும் சபரிமலை சீசன் துவங்கி உள்ளதால் ஐயப்ப, முருக பக்தர்களின் வழிபாட்டிற்கு தினமும் ஆயிரக்கணக்கான தேங்காய்கள் தேவைப் படுகிறது. இதேபோல் இளநீர் தேவையும் அதிகரிக்க துவங்கியுள்ளதால், அவற்றுக்கு நல்ல விலை கிடைத்து வருகிறது. இதனால், தென்னை விவசாயிகள் இளநீராகவே பறித்து விற்று விடுகின்றனர். இதனாலும், தேங்காய்களுக்கு தேவை அதிகரித்து வருகிறது. கடந்த ஆண்டு சில்லரை விலையில் 5 ரூபாய்க்கு விற்கப்பட்ட ஒரு தேங்காய், தற்போது 10 ரூபாய்க்கும் அதிகமாக உள்ளது. மொத்த வியா ாபரிகள் எடைக்கணக்கில் தேங்காய்களை விற்பனை செய்கின்றனர். இதனால் தேங்காய் விலை தொடர்ந்து ஏறு முகத்தில் உள்ளதாக சிறு வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

## உணவு உற்பத்தியை பெருக்க வேண்டும்: கருத்தரங்கில் நெதர்லாந்து நிபுணர் பேச்சு

சேலம்: "பசுமை குடில் திட்டம் மூலம், உணவு உற்பத்தியை பெருக்க, நடவடிக்கை எடுக்க வேண்டும்," என, நெதர்லாந்து நாட்டு நிபுணர் ராபர்ட் பேசினார். சேலத்தில், இந்திய தொழில் கூட்டமைப்பு சேலம் கிளை சார்பில், பசுமை குடில் சாகுபடி குறித்த கருத்தரங்கம், நேற்று நடந்தது. அதில், நெதர்லாந்து நாட்டு நிபுணர் ராபர்ட் பேசியதாவது: பசுமை குடில் சாகுபடி குறித்து, தொழில்நுட்ப ரீதியாகவும், மண்ணின் தரம், சீதோஷ்ண நிலை குறித்தும் நன்றாக அறிந்து வைத்திருக்க வேண்டும். நாளுக்கு நாள் உணவு தேவை அதிகரித்து வருகிறது. அதனால், உணவு உற்பத்தியை பெருக்க வேண்டியது அவசியம். அதற்கு, பசுமை குடில் திட்டம் பயனுள்ளதாக இருக்கும். இதன் மூலம் ஏற்றுமதி அதிகரிப்பதோடு, விவசாயிகள் நல்ல வருவாய் ஈட்ட முடியும். சீசன் இல்லாத நேரத்திலும் காய், பழம், பூக்கள் உற்பத்தி செய்ய முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

வேளாண் பல்கலை முன்னாள் துணைவேந்தர் முருகேசபூபதி பேசியதாவது: கடந்த, 1947ம் ஆண்டு, இந்திய மக்கள் தொகை, 33 கோடி. அப்போது, 53 கோடி மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்பட்டது. முதல் இரண்டு, ஐந்தாண்டு திட்டங்களில், உணவு உற்பத்திக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. தற்போது, 127 கோடி மக்கள் தொகை. 260 கோடி மெட்ரிக் டன் உணவு உற்பத்தி செய்யப்படுகிறது. ஆனால், பற்றாக்குறை உள்ளது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்கிறோம். பசுமை குடில் திட்டத்தில், காய்கறி வகைகள், பழங்கள் உள்ளிட்டவற்றை, எந்த சீதோஷ்ண நிலையிலும் விளைவிக்க முடியும். இவ்வாறு அவர் பேசினார்.

**விவசாயிகள் சந்திப்பு கூட்டம்**

சிவகங்கை:இளையான்குடி அருகே கச்சாத்தநல்லூரில் விவசாயிகள், விஞ்ஞானிகள் சந்திப்பு நிகழ்ச்சி நடந்தது. நெற்பயிரில் பூச்சி கட்டுப்பாட்டு முறை குறித்து விளக்கம் அளிக்கப்பட்டது. இளையான்குடி வேளாண்மை உதவி இயக்குனர் ஜெயராஜ் தலைமை வகித்தார். குன்றக்குடி வேளாண் அறிவியல் நிலைய தலைவர் செந்தூர்குமரன், உதவி பேராசிரியர் செல்வராஜ் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் அளித்தனர்.

**பருத்தி தோட்டத்தில் ஆய்வு**

சிவகாசி:சிவகாசி சேர்வைக்காரன்பட்டி கிராமத்தில் சாகுபடி செய்துள்ள பருத்தி பயிரை கோவிலாங்குளம் மண்டல ஆராய்ச்சி நிலைய தலைவர் பால்பாண்டி மற்றும் பூச்சியல் பேராசிரியர் முத்தையா ஆய்வு நடத்தினர். பருத்தியில் மெக்னீசிய குறைபாடு இருப்பது கண்டறியப் பட்டது. இதை நிவர்த்தி செய்யக் கூடிய மருந்து கரைசலை விவசாயிகளிடம் அதிகாரிகள் தெரிவித்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் பத்மாவதி, துணை வேளாண்மை அலுவலர் நாராயணன் உடன் இருந்தனர்.

**நில வேம்புகஷாயம் வழங்கல்**

சாத்தூர்:சாத்தூர் கம்ம மகாஜன டிரஸ்ட் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 1, 100 மாணவிகளுக்கு நில வேம்புகஷாயம் வழங்கப்பட்டது. தலைமையாசிரியர் பத்மாவதி வரவேற்றார். மேட்டமலை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கத்தலைவர் கனகராஜ், வட்டார வீட்டு வசதி சங்கத் தலைவர் தமிழ்ச்செல்வன், சாத்தூர் ஒன்றியக்குழு துணைத் தலைவர் செல்வராணி, சித்தா டாக்டர் வனிதா வழங்கினர்.*சாத்தூர் அண்ணாநகர் பகுதியில் த.மா.கா., சார்பில்

மக்களுக்கு இலவசமாக நிலவேம்பு கஷாயம் வழங்கப்பட்டது. விருதுநகர் தெற்கு மாவட்டத்தலைவர் ஜி.வி.கார்த்திக் துவக்கி வைத்தார். நகர தலைவர் டி.எஸ்.அய்யப்பன், மாவட்ட பொதுச்செயலாளர் செய்யதுஇப்ராஹிம், கிழக்கு வட்டாரத் தலைவர் மாரிமுத்து உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

திண்டுக்கல் மாவட்ட விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை (டிச. 18) நடைபெறுகிறது. இதுகுறித்து ஆட்சியர் த.ந.ஹரிஹரன் வெளியிட்டுள்ள செய்தி: மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெறும் இந்த கூட்டத்தில், அனைத்துத் துறை அலுவலர்களும் கலந்து கொண்டு, விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். மேலும், கடந்த நவம்பர் மாதம் நடைபெற்ற குறைதீர் கூட்டத்தின் போது விவசாயிகள் அளித்த கோரிக்கை மனுக்களுக்கும் பதில் அளிக்கப்படுகிறது. எனவே, மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கூட்டத்தில் கலந்து கொண்டு பயனடையலாம் என தெரிவித்துள்ளார்.

**டிச.22-இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் 22-ஆம் தேதி (செவ்வாய்க்கிழமை) நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தெரிவித்தார். இதுகுறித்து அவர் வியாழக்கிழமை

வெளியிட்ட செய்தி: கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மாவட்ட ஆட்சியர் டி.பி.ராஜேஷ் தலைமையில் மாவட்ட விவசாயிகள் குறைதீர் கூட்டம், வரும் செவ்வாய்க்கிழமை (டிச.22) காலை 11 மணியளவில் நடைபெற உள்ளது. இந்தக் கூட்டத்தில் விவசாயிகள் அனைவரும் பங்கேற்று தங்களது குறைகளைத் தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளலாம் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## குமரி மாவட்டத்தில் மழையின் தீவிரம் தணிந்தது: பாசனத்துக்கு திறந்து விடப்படும் தண்ணீர் அதிகரிப்பு

குமரி மாவட்டத்தில் மழையின் தீவிரம் தணிந்துள்ள நிலையில் பாசனத்துக்காக திறந்து விடப்படும் தண்ணீரின் அளவு அதிகரிக்கப்பட்டு வருகிறது. இம் மாவட்டத்தில் அணைகள் நிரம்பியிருந்த நிலையிலும், மழை தொடர்ந்து பெய்து விவசாயிகளையும், பொதுமக்களையும் அச்சுறுத்தி வந்தது. இந்நிலையில் மழையின் தீவிரம் தணிந்துள்ளது. சில இடங்களில் மட்டும் மிதமான சாரல் மழை பெய்து வருகிறது. பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்து வருவதால் அணைகளிலிருந்து பாசனத்துக்காக திறக்கப்படும் தண்ணீர் அதிகரிக்கப்பட்டு வருகிறது.

பேச்சிப்பாறை அணையிலிருந்து பாசனத்துக்காக திறக்கப்படும் தண்ணீரின் அளவு வியாழக்கிழமை விநாடிக்கு 345 கன அடியாக அதிகரிக்கப்பட்டது.

அணைகளில் நீர்மட்டம்: பேச்சிப்பாறை அணையின் நீர்மட்டம் 46.11 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 321 கன அடி நீர் வந்து கொண்டிருந்தது. பெருஞ்சாணி அணையின் நீர்மட்டம் 75.22 அடியாக இருந்தது. அணைக்கு விநாடிக்கு 268 கன அடி நீர்வரத்து உள்ளது. அணையிலிருந்து பாசனத்துக்கு 244 கன அடி தண்ணீர் திறந்து விடப்பட்டது.

சிற்றாறு 1 அணையின் நீர்மட்டம் 16.83 அடியாகவும், சிற்றாறு 2 அணையின் நீர்மட்டம் 16.93 அடியாகவும் இருந்தது. பொய்கை அணையின் நீர்மட்டம் 26.80 அடியாகவும், மாம்பழத்துறையாறு அணையின் நீர்மட்டம் 54.12 அடியாகவும் இருந்தது. மாவட்டத்தில் அதிகபட்சமாக கன்னிமார் மற்றும் பாலமோரில் 5 மி.மீ. மழையும், பேச்சிப்பாறையில் 3.4 மி.மீ. மழையும் பதிவாகியிருந்தது.

அணைகளின் நீர்மட்டம் உயர்த்தப்படவேண்டும்: மாவட்டத்தில் மழை நீடித்து வந்த நிலையில் வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில் அணைகளின் நீர்மட்டத்தை முழுக் கொள்ளளவுக்கும் உயர்த்தாமல், அதற்கு 2 அடிக்கு குறைவாகவே தேக்கப்பட்டு கூடுதலாக வரும் தண்ணீர் உபரியாக வெளியேற்றப்பட்டது.

இந்நிலையில் தற்போது மழை நின்று விட்டதால் அணைகளின் நீர்மட்டம் உச்ச அளவுக்கு உயர்த்தப்பட வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இதுகுறித்து பொதுப்பணித்துறை நீராதாரப்பிரிவு செயற்பொறியாளர் சுப்பிரமணி கூறியதாவது: தற்போது மழை முற்றிலும் நின்று விட்டதாக வானிலை அறிவிப்புகள் வரவில்லை. பாசனத்துக்கு தட்டுப்பாடில்லாமல் தண்ணீர் கொடுக்க வேண்டியுள்ளது. தொடர் மழை பெய்யும் போது வெள்ள அபாயத்தை தடுக்கும் வகையில் அணைகளின் நீர்மட்டத்தை கட்டுப்பாட்டில் வைக்க வேண்டும். மழை நின்றவுடன் பாசனத்துக்கு தண்ணீர் வழங்க வேண்டும். பொதுப்பணித்துறை இதைத்தான் கருத்தில் கொண்டுசெயல்படும்என்றார்.

தினகரன்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**மேட்டூர் நீர்மட்டம் 96.84 அடி**



மேட்டூர்: மேட்டூர் அணையின் நீர்மட்டம் 96.84 அடியாக உயர்ந்தது. மேட்டூர் அணைக்கு நேற்று முன்தினம் வினாடிக்கு 4,225 கனஅடியாக இருந்த நீர்வரத்து, நேற்று வினாடிக்கு 3,360 கனஅடியாக சரிந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்திற்கு வினாடிக்கு 500 கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்திற்கு வினாடிக்கு 800 கனஅடியும் தண்ணீர்திறக்கப்படுகிறது. நீர்திறப்பை விட, வரத்து அதிகமாக உள்ளதால் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது. நேற்று முன்தினம் 96.71 அடியாக இருந்த நீர்மட்டம், நேற்று 96.84 அடியாக உயர்ந்தது. நீர் இருப்பு 60.82 டிஎம்சி.

## தேயிலைத்தூள் ரூ.3.36 கோடிக்கு விற்பனை




கோவை: கோவை தேயிலை வர்த்தக மையத்தில் நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில் உள்ளூர் ரகம் (டஸ்ட்) 2.78 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. இதில் 2.57 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரி விற்பனை விலை கிலோ ரூ.91.23. விற்பனை மதிப்பு ரூ.2.34 கோடி. ஏற்றுமதி ரகம் (லீப்) 1.34 லட்சம் கிலோ விற்பனைக்கு வந்தது. 1.30 லட்சம் கிலோ விற்பனையானது. சராசரி விற்பனை விலை கிலோ ரூ.78.10. விற்பனை மதிப்பு ரூ.1.01 கோடி. கடந்த வார விற்பனையோடு ஒப்பிடுகையில், உள்ளூர் ரகம் கிலோவுக்கு ரூ.3.92ம், ஏற்றுமதி ரகம் கிலோவுக்கு ரூ.1.24ம் உயர்ந்துள்ளது. மொத்தத்தில் உள்ளூர் மற்றும் ஏற்றுமதி ரக தேயிலைத்தூள் ரூ.3.36 கோடிக்கு விற்றுள்ளது. இது கடந்த வாரத்தை விட ரூ.12.56 லட்சம் அதிகம். தொடர்ந்து 5வது வாரமாக விற்பனை மதிப்பு அதிகரித்து, ரூ.3 கோடிக்கு மேல் வர்த்தகம் நடந்து வருகிறது.

## விவசாயிகளுக்கு முந்திரி கன்றுகள் விற்பனை

விருத்தாசலம், :விருத்தாசலம் அரசு தோட்டக்கலை பண்ணையில் விவசாயிகளுக்கு விற்பனை செய்ய 1.5 லட்சம் விஆர்ஐ முந்திரி கன்றுகள்

தயார் நிலையில் உள்ளது.விருத்தாசலம் காட்டுக்கூடலூர் சாலையில் உள்ள அரசு தோட்டக்கலை பண்ணையில் தோட்டக்கலை துறை திட்டங்களில் மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கவும், நேரடியாக விற்பனை செய்யவும் விஆர்ஐ ரக வீரிய ரக முந்திரி கன்றுகள் 1.5 லட்சம் கன்றுகள் தயார் நிலையில் உள்ளது. தேவைப்படும் விவசாயிகள் நேரிடையாகவும், வேளாண்மை அலுவலர்கள் மூலமாகவும் பெற்று பயனடையலாம் என தோட்டக்கலை துறை அலுவலர்கள் தெரிவித்துள்ளனர்.

## ஆடுதுறை நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நெற்பயிரில் ஒருங்கிணைந்த மேலாண்மை பயிற்சி

திருச்சி, : திருச்சி மாவட்ட வேளாண்மை தொழில்நுட்ப மேலாண்மை முகமையின் மாநில திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்பு திட்டத்தின் கீழ் நெற் பயிரில் ஒருங்கிணைந்த பயிர் மேலாண்மை பற்றிய 3 நாள் பயிற்சி ஆடுதுறையில் அமைந்துள்ள தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலையத்தில் நடைபெற்றது. இப்பயிற்சியில் 40 விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர். திருச்சி மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சந்திரசேகரன், துணை திட்ட இயக்குனர்கள் சரவணன், ராஜாமணி மற்றும் லால்குடி வட்டார தொழில்நுட்ப குழுவின் ஒருங்கிணைப்பாளர் மரியம் ரவி ஜெயகுமார் ஆகியோர் பயிற்சியை துவக்கி வைத்தனர். நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி தற்ேபாதைய சூழலில் ஒருங்கிணைந்த முறையில் நெற்பயிருக்கு ஊட்டச்சத்து நிர்வாகம், பூச்சி நோய் நிர்வாகம் செய்வதன் அவசியத்தை விளக்கி கூறினார். நிலையத்தின் தொழில்நுட்ப வல்லுனர்கள் நெல் விதை முதல் விளைச்சல் வரை நெற் பயிரின் சாகுபடி காலத்தில் பின் பற்றவேண்டிய தொழில்நுட்பங்கள் பற்றி பயிற்சியளித்தனர். பயிற்சியின் போது நிலையத்தில் பயிாிடப்பட்டுள்ள புதிய ரக மேம்பாட்டு

திடல்களை நிலைய விஞ்ஞானிகள் காண்பித்து புதிய நெல் ரகங்களின் சிறப்பியல்புகளை விளக்கி கூறினர்.

## 75 சதவீத மானியத்தில் விவசாயிகளுக்கு தீவனம்

காரைக்கால், : புதுச்சேரி அரசு கூட்டுறவுத்துறை மூலம் தருமபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய சங்க உறுப்பினர்களுக்கு 75 சதவீத மானியத்தில் தீவனம் வழங்கும் நிகழ்ச்சி நடந்தது. கலெக்டர் வல்லவன், கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய நிர்வாகிகள் முன்னிலை வகித்தனர். தருமபுரம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் ஒன்றிய சங்க உறுப்பினர்களுக்கு தீவனத்தை எம்எல்ஏ நாஜிம் வழங்கினார். முன்னதாக கனமழையில் பாதிக்கப்பட்ட புதுத்துறை, தருமபுரம் மக்களுக்கு இலவச போர்வையை எம்எல்ஏ நாஜிம் வழங்கினார்.

## தென்னிலையில் ஆடு வளர்க்க இலவச பயிற்சி

க.பரமத்தி, : க.பரமத்தி ஒன்றியம் தென்னிலையில் நடந்த ஆடுகள் வளர்ப்பு பயிற்சி கூட்டத்தில் பட்டி, கொட்டகை அமைத்து ஆடுகள் வளர்க்க ஆலோசனைகள் வழங்கப்பட்டது. க.பரமத்தி ஒன்றியம் தென்னிலை கிழக்கு, தென்னிலை தெற்கு ஆகிய இரண்டு வெவ்வேறு ஊராட்சிகளில் 133 பயனாளிகளுக்கு இலவச ஆடுகள் வழங்கப்பட உள்ளது. இதையடுத்து பயனாளிகளுக்கு ஆடுகள் வளர்ப்பு பற்றிய பயிற்சி கூட்டம் தென்னிலையில் நடைபெற்றது. கால்நடை டாக்டர் கலைவாணிமோகன்ராஜ் வரவேற்றார். கால்நடை பராமரிப்புத்துறை உதவி இயக்குநர் ராஜேந்திரன், ஊராட்சி தலைவர்கள் தென்னிலை தெற்கு துரைசாமி, தென்னிலை கிழக்கு சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக் கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி நிலைய உதவி பேராசிரியை பாரதி திட்டம் குறித்தும், மண்டல இணை இயக்குனர் பழனிவேல் தலைமை வகித்தும் பேசினர்.

கொட்டகை மற்றும் இடவசதிகள் குறித்தும், தீவனங்களை பராமரிப்பது, தீவனம் தயாரிப்பு முறைகள், இனப்பெருக்கம், சினை ஆடுகள் மற்றும் குட்டிகளை பாராமரிக்கும் முறை, கால்நடைகளை தாக்கும் நோய்களான வெக்கை சார்பு, நீல நாக்கு, செம்மறியாட்டு அம்மை, துள்ளுமாரி, தொற்று கழிதல், கருச்சிதைவு, குளம்பு அழுகல் ஆகிய நோய்களில் இருந்து ஆடுகளை பாதுகாக்க அவ்வப்போது கால்நடை அரசு மருத்துமனைக்கு கொண்டு வந்து உரிய நேரத்தில் ஆடுகளுக்கு தடுப்பூசி போட வேண்டும் என கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது. செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடு வளர்ப்பு பற்றி கால்நடை டாக்டர்கள் மோகன்ராஜ், கலைவாணி ஆகியோர் பொதுமக்களுக்கு பயிற்சி அளித்தனர். கால்நடை ஆய்வாளர் பெரியசாமி, உதவியாளர்கள் மரிய உபகாரம், முருகேசன், தர்மராஜ், உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## திருச்செந்துறையில் 2,296 வாழைத்தார் ஏலம்

திருச்சி, : திருச்செந்துறை வாழை வணிக வளாகத்துக்கு குழுமணி, செங்குடி, சிறுகாம்பூர், கா◌ியமாணிக்கம், திண்டுக்கரை, அா◌ியமங்கலம், அந்தநல்லூர், நெய்வேலி ஆகிய கிராமங்களிலிருந்து 23 விவசாயிகள் தாங்கள் விளைவித்த வாழைத்தார்களுடன் ஏலத்தில் கலந்து கொண்டனர். திண்டுக்கல், பழனி, லாலாபேட்டை, மஞ்சக்கோரை, கோட்டுர், திருச்சி ஆகிய ஊர்களிலிருந்து மொத்தம் 17 வியாபா◌ா◌ிகள் ஏலத்தில் கலந்து கொண்டு வாழைத்தார்களை ஏலம் எடுத்தனர். மொத்தம் ரூ.36,950 மதிப்பிற்கு ஏலம் நடைபெற்றது. இங்கு பூவன் அதிகபட்சமாக ரூ.75க்கும், மொந்தன் தார் அதிகபட்சமாக ரூ.105க்கும், பேயன்தார் அதிகபட்சமாக ரூ.70க்கும், கற்பூரவள்ளிதார் அதிகபட்சமாக ரூ.80க்கும் ஏலம் போனது. தரமான வாழைத்தார்கள் நல்ல விலைக்கு ஏலம்போனது. அடுத்த ஏலம் வரும் 22ம் தேதி நடை◌ெபறுகிறது.

## ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு மக்காச்சோளம் கொண்டு வர கோரிக்கை

பெரம்பலூர்,: மக்காச்சோளத்தை 100 கிலோ கொண்ட மூட்டைகளாக இல்லாமல் 40 அல்லது 50 கிலோ கொண்ட சிறிய மூட்டைகளாக பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கொண்டு வர கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. இது குறித்து வெளியிடப்பட்டுள்ள செய்தி குறிப்பில் தெரிவித்துள்ளதாவது: பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தின் மூலம் எதிர் வரும் அறுவடை பருவத்தில் மக்காச்சோளம் விற்பனை செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது. சென்ற ஆண்டு பெரம்பலூர் மாவட்ட விவசாயிகள் தாங்கள் பயிர் செய்த பருத்தி பஞ்சு மகசூலை பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு அதிக அளவில் கொண்டு வந்து விற்பனை செய்து நல்ல விலையும் அதன் மூலம் கூடுதல் வருமானமும் பெற்றனர். அதே போல நடப்பு ஆண்டு பருத்தி மற்றும் மக்காச்சோள விற்பனை செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் இந்த ஆண்டு மக்காச்சோளம் 51 ஆயிரத்து 500 எக்ட்ரிலும் பருத்தி 20 ஆயிரத்து 300 எக்டரிலும் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது பயிரிடப்பட்டுள்ள மக்காச்சோளம் மற்றும் பருத்தி 2016 ஜனவரி மற்றும் பிப்ரவரி மாதங்களில் அறுவடைக்கு வரும் பொழுது விவசாயிகள் தங்களது விளைபொருளை பெரம்பலூர் ஒழுங்குமுறை விற்பனை கூடத்திற்கு கொண்டு வந்து விற்பனை செய்து பயன்பெற வேண்டும். உள்ளூரில் தனியாரிடம் விற்பனை செய்யும் போது எடையில் ஏற்படும் குளறுபடிகளை தவிர்த்து ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் சரியான எடையும் போட்டி மூலம் அதிக விலையும் பெற முடியும். மக்காச் சோளத்தை 100 கிலோ கொண்ட மூட்டைகளாக பிடிக்காமல் அவற்றை வண்டியில் ஏற்றி, இறக்க வசதியாக அதே பெரிய சாக்கு பைகளில் 40 கிலோ அல்லது 50 கிலோ கொண்ட சிறிய மூட்டைகளாக பிடிக்க வேண்டும். இதற்கு அதிக விலையுள்ள புதிய கோணிப்பைகளை

பயன்படுத்த வேண்டியதில்லை. மாறாக நல்ல நிலையில் உள்ள விலை குறைவான பழைய கோணி சாக்குகள், கழுவி சுத்தம் செய்யப்பட்ட உர சாக்குகள் மற்றும் சிமென்ட் சாக்குகளை பயன்படுத்தலாம். பெரம்பலூர் ஆத்தூர் துறையூர், அரியலூர், திருச்சி போன்ற ஊர்களில் உள்ள சாக்கு வியாபாரிகளிடமிருந்து ஒருமுறை அல்லது இரண்டு முறை பயன்படுத்தப்பட்ட கோணிசாக்குகள், சிமென்ட் சாக்குகள் மற்றும் உர சாக்குகளை இப்போதிருந்தே கொள்முதல் செய்து இருப்பு வைத்திட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். எனவே எதிர்வரும் அறுவடை பருவத்தில் மக்காச்சோளம் மற்றும் பருத்தி மகசூலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திற்கு விவசாயிகள் கொண்டுவந்து விற்பனை செய்து பயன் பெறவேண்டும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**கால்நடை மருத்துவ முகாம்**

பொன்னமராவதி, : பொன்னமராவதி அடுத்த கேசராபட்டியில் கால்நடை மருத்துவ முகாம் நடைபெற்றது. மழைக் காலத்தில் கால்நடைகளுக்கு நோய் வராமல் தடுத்திடும் நோக்கில் கால்நடை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு வருகிறது. இதன்படி, பொன்னமராவதி அடுத்த கேசராபட்டியில் நடைபெற்ற மருத்துவ முகாமில், கால்நடை மருத்துவர்கள் சேரன் செங்குட்டுவன், சண்முகநாதன் ஆகியோர் சிகிச்சை அளித்ததோடு, மருந்து, மாத்திரைகள் வழங்கினர். அத்துடன் தேவையான தடுப்பூசியும் போடப்பட்டது. முகாமில் துணைத் தலைவர் செல்லையா, ஊராட்சி உறுப்பினர் அடைக்கி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். திருமயம்: இதே போல், திருமயத்தில் இலவச வெள்ளாடுகளுக்காக நடைபெற்ற இலவச முகாமை திருமயம் ஊராட்சி தலைவர் அன்பரசி அடைக்கன் துவக்கிவைத்தார். முகாமில் கால்நடை சிறப்பு மருத்துவர் ஜான்சன் சாமுவேல் தலைமையில் கால்நடை மருத்துவர்கள் சிவப்

பிரகாசம், திருநாவுக்கரசு, கால்நடை ஆய்வாளர்கள் குமரேசன் மணிமுத்து குமார் ஆகியோர் இலவச வெள்ளாடுகளுக்கு மருத்துவ சிகிச்சை அளித்தனர். மேலும், முகாமில் பங்கேற்ற 500 வெள்ளாடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. 100 ஆடுகளுக்கு பல்வேறு நோய்களுக்கு சிறப்பு சிகிச்சையளிக்கபட்டது. அத்துடன் வெள்ளாடுகளை பல்வேறு நோய்த் தாக்குதலில் இருந்து காப்பது எப்படி? என்பது குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

## நிலக்கடலை சாகுபடியில் கூடுதல் மகசூல் பெறுவது எப்படி? வேளாண் துறை ஆலோசனை

கறம்பக்குடி, : கறம்பக்கடி வட்டாரத்தில் நிலக்கடலை சாகுபடியில்கூடுதல் மகசூல் பெறுவது எப்படி? என்பது குறித்து வேளாண் துறை ஆலோசனை தெரிவித்துள்ளது. கறம்பக்குடி பகுதிகளில் இறவை நிலக்கடலை சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகள், அதிக மகசூல் பெறும் வழிமுறை குறித்து வேளாண் உதவி இயக்குநர் மனோகரன் ஆலோசனை வழங்கியுள்ளர். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: இறவை நிலக்கடலை சாகுபடியில் விவசாயிகள் கூடுதல் மகசூல் பெற பயிர் எண்ணிக்கையை சராசரியாகப் பராமரிக்க வேண்டும். விதைக்கு விதை இடைவெளி விட வேண்டும். குறிப்பாக வரிசைக்கு வரிசை 30 செ.மீ. செடிக்குச் செடி 10.செ.மீ இடைவெளி இருக்க வேண்டும் மேலும் விதையானது 4 செ.மீ ஆழத்துக்கு கீழே செல்லக்கூடாது. விதை பருப்பை ஏக்கருக்கு 50 முதல் 55 கிலோ வரை பயன்படுத்த வேண்டும். நிலக் கடலையில் 2-ம் முறையாகக் களை எடுக்கும் போது (45 நாள்) ஒரு ஏக்கருக்கு 80 கிலோ ஜிப்சம் இட்டு மண் அணைத்தால் நிலக்கடலை திரட்சியாகி மகசூல் அதிகம் கிடைக்கும். மேலும் விவரங்களை கறம்பக்குடி வட்டார வேளாண் உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகித்

தெரிந்துகொள்ளலாம். இவ்வாறு அந்த செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## கூட்டுறவு சார்பில் விவசாய பொறுப்பு குழுவுக்கு ரூ.7.25 லட்சம் வேளாண் கடன்

பொன்னமராவதி, : விவசாய பொறுப்புக் குழுவுக்கு ரூ.7.25 லட்சம் மதிப்பீட்டிலான வேளாண் கடன் வழங்கப்பட்டது. புதுக்கோட்டை மாவட்டம், பொன்னமராவதி அடுத்த திருக்களம்பூரில் இயங்கி வரும் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கம் சார்பில், விவசாய பொறுப்புக் குழுவினருக்கு ரூ.7.25 லட்சம் மதிப்பீட்டிலான வேளாண் கடன் வழங்கப்பட்டது. இதையொட்டி நடைபெற்ற நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்த சங்கத் தலைவர் ராசமாணிக்கம், 4 விவசாய பொறுப்புக் குழுவுக்கு ரூ.7.25 லட்சம் மதிப்பீட்டிலான வேளாண் கடன் வழங்கினார். இதில் சங்கச் செயலர் துரையரசன், பணியாளர்கள் பெருமாள், செல்வராஜ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## கரும்பு பயிரில் எடையுடன் கூடிய மகசூல்பெற விளக்கம்

சேதுபாவாசத்திரம், : கரும்பு பயிரில் எடையுடன் கூடிய மகசூல்பெற, நீர் பாசனம் செய்ய வேண்டிய பருவங்கள் குறித்து சேதுபாவாசத்திரம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் பெரியசாமி விளக்கமளித்துள்ளார். அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில்: கரும்பு பயிர் நிமிர்ந்து நிற்பதற்கும், வெயிலின் தாக்கத்தால் வாடாமல் இருப்பதற்கும், வேர்மூலம் ஊட்டச்சத்துக்களை எடுத்துக்கொள்வதற்கும், ஒளிச்சேர்க்கை மூலம் சர்க்கரை மற்றும் மாவுப்பொருட்களை உற்பத்தி செய்வதற்கும், பயிரினுள் நடைபெறும் வேதியில் மாறுதல்களுக்கும், நீர் முக்கிய பங்கு வகிக்கிறது. வளரும் பயிரின் எடையில் 80 முதல் 85சதவீதம் வரை நீர் உள்ளது. ஒரு டன் கரும்பு விளைவிக்க 125 டன் நீர்

தேவைப்படுகிறது. ஒரு டன் சர்க்கரை உற்பத்தி செய்ய சுமார் 1350 டன் நீரை கரும்பு பயிர் எடுத்துக்கொள்கிறது. ஒருபோக கரும்பு சாகுபடி செய்ய 2000 முதல் 2500மி.மீ நீர் தேவைப்படுகிறது. ஒரு ஹெக்டர் பரப்பில் ஒருபோக கரும்பு சாகுபடி செய்ய தேவைப்படும் 2500மி.மீ நீரை கொண்டு இருபோக நெற்பயிரையோ அல்லது ஐந்துபோக சோளப்பயிரையோ அல்லது எட்டுபோக கம்பு பயிரையோ பயிரிடலாம். பாசன நீரை பருவத்தை பொருத்து பல்வேறு இடைவெளிகளில் சுமார் 38 முதல் 40 முறை பாசனம் செய்ய வேண்டும். 1 முதல் 35 வரை நாட்களான முளைப்பு பருவத்தில் 7 நாட்கள் இடைவெளியில் 5 பாசனமும். 36 முதல் 100 நாட்கள் வரையிலான தூர்கட்டும் பருவத்தில் 10 நாட்கள் இடைவெளியில் 5 பாசனமும், 101 முதல் 270 நாட்கள் வரையினால் வளர்ச்சி பருவத்தில் 8நாட்கள் இடைவெளியில் 21 பாசனமும், 271 முதல் அறுவடை வரையிலான முதிர்ச்சி பருவத்தில் 13 நாட்கள் இடைவெளியில் 6 பாசனமும் என மொத்தம் 38 முறை கரும்புக்கு பாசனம் செய்வதன் மூலம் நீர் சத்து நிறைந்த நல்ல எடையுடன் கூடிய அதிக சர்க்கரை, பிழிதிறன் கொண்ட கரும்பு நமக்கு மகசூலாக கிடைக்கிறது. இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

**பாதிக்கப்பட்ட மக்களுக்கு விவசாயிகள் நிவாரண உதவி**

திருவையாறு, : கடலூரில் தொடர் மழையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அம்மன்பேட்டை கிராம விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில் நிவாரண பொருட்கள் வழங்கப்பட்டது. திருவையாறு அடுத்த அம்மன்பேட்டை கிராம விவசாயிகள் கூட்டமைப்பு சார்பில், கடலூர் மாவட்டம் குறிஞ்சிப்பாடி ஒன்றியம் கல்குண்ணம் ஊராட்சியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட 250 குடும்பங்களுக்கு ரூ.2 லட்சம் மதிப்பிளான அரிசி, மளிகை சாமான்கள், வேஷ்டி, புடவைகள் வழங்கப்பட்டது.

## மழையால் நெற்பயிர் பாதிப்பு வேளாண் அதிகாரிகள் ஆய்வு

நாகை, : நாகை மாவட்டத்தில் மழையால் பாதித்த நெற்பயிர்களை வேளாண் அதிகாரிகள் ஆய்வு செய்தனர். நாகை மாவட்டத்தில் பெய்த வடகிழக்கு பருவமழையால் சாகுபடி செய்யப்பட்ட சம்பா மற்றும் தாளடி நெற்பயிர்கள் 70,000 ஹெக்டரில் பாதிக்கப்பட்டுள்ளது. இதைதொடர்ந்து நாகை, திருமருகல், கீழையூர், கீழ்வேளூர், தலைஞாயிறு, வேதாரண்யம் ஆகிய வட்டாரங்களில் பயிர் சேதம் குறித்து சென்னை வேளாண் துணை இயக்குனர் கனிங்ஸ்டன், ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி தலைமையில் வேளாண் விஞ்ஞானிகள் நேற்று ஆய்வு செய்தனர். அப்போது பாதிக்கப்பட்ட இடங்களை காண்பித்து மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் சேகர் விளக்கம் அளித்தார். செம்பியன்மகாதேவி கிராமத்தில் நீரில் முழுவதும் மூழ்கி பாதிக்கப்பட்ட டிகேஎம் 9 ரக பயிர்கள் அறுவடை செய்ய இயலாத நிலையால் விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள இழப்பு குறித்து எடுத்து கூறினார். மேலும் இளம்பயிர்கள் நீரில் முழ்கியதால் தூர்கட்ட முடியாத நிலை, பூக்கும் நிலையில் உள்ள பயிர்களில் மகரந்தசேர்க்கை நடைபெறும் நிலையில் நீர் புகுந்ததால் கதிர்கள் சாவியாக வரும் நிலை, தூர்கட்டும் பருவத்தில் நீரில் ஒரு மாதமாக பயிர் இருந்ததால் சத்துக்களை வேர் மூலம் எடுத்து கொள்ள இயலாத நிலையில் வளர்ச்சி குன்றி மகசூல் இழப்பீடு ஏற்பட்டுள்ளதை மாவட்ட வேளாண் இணை இயக்குனர் விளக்கினார். பின்னர் சென்னை வேளாண் துணை இயக்குனர் கனிங்ஸ்டன், ஆடுதுறை தமிழ்நாடு நெல் ஆராய்ச்சி நிலைய இயக்குனர் ரவி ஆகியோர் வேளாண்மை உதவி இயக்குனர்களுடன் பயிர் பாதிப்பு குறித்து விவாதித்தனர்.

## பழக்கன்றுகள் வாங்க பூஞ்சுத்திக்கு வாங்க..

மதுரை, : பூஞ்சுத்தியில் அரசு தோட்டக்கலைத்துறை சார்பில் அனைத்து வகையான பழக்கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டு விற்பனைக்கு

வைக்கப்பட்டுள்ளது. மதுரை மாவட்டம் பூச்சுத்தியில் அரசு தோட்டக்கலைப் பண்ணை சார்பில் பழச்செடிகள் மற்றும் காய்கறி நாற்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. சுமார் 15 ஏக்கர் பரப்பளவில் அதிக மகசூல் தரும் பங்களப்பளி,காளப்படி, சேலம், சப்போட்டா, இமாம் உள்ளிட்ட உயர்ரக மாங்கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில் ஒட்டு மரக்கன்றுகளும் தயார் செய்யப்படுகிறது. இதேபோல் உயர்தர வெளிநாட்டு பாப்பாளி வகை கன்றுகள், சப்போட்டா பழம், கொய்யாக்கன்றுகள், புளி, மிளகாய் போன்ற கன்றுகளும் உற்பத்தி செய்யப்படுகிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் தனிப்பணியாளர்கள் இவற்றை பராமரித்து வருகின்றனர். கொய்யா, சப்போட்டா போன்ற கன்றுகளுக்கு சொட்டு நீர் பாசனம் மூலம் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

இது குறித்து கலெக்டர் சுப்பிரமணியன் கூறுகையில், “ இங்கு உற்பத்தி செய்யப்படும் பழக்கன்றுகள் பல்வேறு நிலையில் பராமரிப்பு செய்யப்பட்டு பொது மக்களுக்கு விற்பனை வழங்கப்படுகிறது. அனைத்து வகையான கன்றுகளும் இங்கு கிடைக்கும். மதுரை மாவட்டத்தில் கொய்யா பழம் அதிக அளவில் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற நோக்கத்தில் இங்கு கூடுதலாக ஆயிரம் கன்றுகள் உற்பத்தி செய்யப்படுகிறது’’ என்றார்.

## விவசாயிகள் ஆலோசனை கூட்டம்

கமுதி. : கமுதி வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் வட்டார அளவிலான விவசாயிகள் ஆலோசனை கூட்டம் கமுதி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் 2015-16ம் ஆண்டிற்கான விவசாயிகளின் இலக்கு மற்றும் சாதனை விவரங்கள், வேளாண்மைத் துறையில் நவீன தொழில்நுட்பங்கள் குறித்தும், விவசாய பணிகள் மற்றும் விவசாய பணிகள் குறித்து விவசாயிகளுக்கு பல்வேறு பயிற்சிகள் வேளாண்மை விரிவாக்க சீரமைப்பு திட்டத்தின் கீழ் பயிற்சி மற்றும் விளக்கம் அளிக்கப்பட்டது. இதில் கமுதி வட்டாரத்திற்கு உட்பட்ட விவசாயிகள் 50க்கும் மேற்பட்டடோர் கலந்து கொண்டனர்.

ஏற்பாடுகளை கமுதி வட்டார தொழில்நுட்ப மேலாளர் ஈஸ்வரி மற்றும் தொழில்நுட்ப மேலாளர் பாரதீஸ்வரி செய்திருந்தனர்.

## இளையான்குடி பகுதியில் ஊடு பயிராக உளுந்து சாகுபடி

இளையான்குடி. இளையான்குடி பகுதி விவசாயிகள் மிளகாய் பயிருடன் ஊடுபயிராக உளுந்து அதிக அளவில் சாகுபடி செய்துள்ளனர். கடந்த செப்டம்பர் மாதத்தில் மிளகாய் விதைக்கப்பட்டபோது பாத்தி கரைகளில் ஊடுபயிராக ஊளுந்து விதைக்கப்பட்டது. சில தினங்களுக்கு முன் பெய்த லேசான மழையால் உளுந்துச் செடிகள் நன்றாக வளர்ந்து தற்போது காய்கள் முற்றிய நிலையில் உள்ளன. இளையான்குடி வட்டாரத்தில் சாலைக்கிராமம், சமுத்திரம், கரும்புக்கூட்டம், கோட்டையூர், கல்வெளிப்பொட்டல், உதயனூர், உள்பட கிராமங்களில் ஊடு பயிராக உளுந்து பயிரிடப்பட்டுள்ளது. கடைகளில் தற்போது கிலோ ரூ.170க்கு வெள்ளை உளுந்து விற்பனை செய்யப்படுகிறது. சாகுபடி செய்த தோல் நீக்காத கருப்பு உளுந்தை கிலோ ரூ.80க்கு விவசாயிகள் விற்பனை செய்கின்றனர். இதில் அதிக அளவு புரதம் உள்ளதால் வீடுகளில் விரும்பி வாங்குகின்றனர்.

## குறைந்த செலவில் மண்புழு உரம் தயாரிக்கும் முறை

காரைக்குடி, சில்பாலின் பைகளில் மண்புழு உரம் தயாரித்து சிறு மற்றும் குறு விவசாயிகள் பயன்பெறலாம் என வேளாண் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.இது குறித்து வேளாண் அதிகாரிகள் தெரிவிக்கையில். மண்புழு என்பது இயற்கையின் மிகப்பெரிய சக்திகளில் ஒன்றாக உள்ளது. மேல் மண் படலத்தை வைத்திருக்கவும். அதற்கு புத்துயிர்ரூட்டவும் மண்புழுவையே இயற்கையானது பயன்படுத்தி கொள்கிறது. மண்புழுவில் எபிஜியிக் புழுக்கள், எண்டோஜியிக் புழுக்கள், அனிசிக் புழுக்கள் என 3வகை உள்ளன. மண்புழு உரம் அதிக அளவில் விற்பனைக்கு இருந்தாலும் அதன் அதிகபடியான விலையால் சிறு மற்றும் குறு விவசாயிகள் அதை வாங்கி பயன்படுத்த முடியாத நிலை உள்ளது. சில்பாலின் பைகள் மண்புழு உரம் தயாரிக்கும் முறையை

எளிதாக்கி அனைத்து விவசாயிகளும் தங்கள் நிலங்களில் இருந்து கிடைக்கும் இயற்கைக் கழிவுகளையும், மண்புழுக் களையும் கொண்டு தங்கள் இடத்திலேயே மண்புழு உரத்தை தயாரிக்கலாம். சிலிப்பாலின் தொட்டி அமைக்க 250 ஜீ.எஸ்.எம் அளவு கொண்ட சிலிப்பாலின் பை தேவை. இதன் அளவு 12 ஜ்4ஜ் 2 அடியாக இருக்க வேண்டும். 4 கிலோ எடையாக இருக்க வேண்டும். இதற்கு ஒரு அங்குலம் கணம் கொண்ட குழாய் அல்லது மூங்கில் சவுக்கு குச்சிகள் தேவைப்படும். சில்பாலின் தொட்டியின் அடிப்பகுதியில் தேங்காய் நார் அரை அடி உயர்த்திற்கு இருக்குமாறு நிரப்ப வேண்டும். இதில் தகுந்த அளவு ஈரப்பதம் உள்ளவாறு நீரினை தெளிக்க வேண்டும். இப் பையை மேல்புறத்தில் நிழல் வலை கொண்டு மூட வேண்டும். அறுவடை செய்யப்பட்ட மண்புழு உரத்தை இருட்டான அறையில் 40 சதவீத ஈரப்பததில் சூரிய ஒளி படாதவாறு வைக்க வேண்டும். மண்புழு உரத்தை உற்பத்தி செய்து அவற்றைப் பயன்படுத்துவதுதான் சிறு மற்றும் குறு விவசாயிகளின் உற்பத்தி திறன் குறைவிற்கு ஒரு மாற்று வழியாகும். இதன்மூலம் 25 சதவீதம் ரசாயன உரச் செலவு குறைந்துஅதிகஉற்பத்தியை பெறலாம் என்றனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

## வேளாண் உற்பத்தியாளர்கள் சங்கம் 3 ஆண்டுகள் செயல்பட்டால் ரூ.1 கோடி கடன் உதவி கிடைக்க வாய்ப்பு ஆனைமலையில் நடந்த கருத்தரங்கில் தகவல்



வேளாண் உற்பத்தியாளர்கள் சங்கம் 3 ஆண்டுகள் செயல்பட்டால் ரூ.1 கோடி வரை கடன் உதவி கிடைக்க வாய்ப்பு உள்ளது என்று ஆனைமலையில் நடந்த கருத்தரங்கில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

கருத்தரங்கு

ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் வேளாண் விளைபொருள் உற்பத்தியாளர்களுக்கான கருத்தரங்கு நடைபெற்றது. வேளாண் வணிகத்துறை அலுவலர் பல்கீஸ் தலைமை தாங்கினார். ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூட கண்காணிப்பாளர் (பொறுப்பு) மேரில்டா கருத்தரங்கை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

மத்திய-மாநில அரசுகள் விவசாயிகளுக்கு சிறப்பு திட்டங்களை அறிவித்துள்ளன. வேளாண் உற்பத்தி பொருட்களை மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்ற விவசாயிகள் முன்வர வேண்டும். பதிவு செய்யப்பட்ட வேளாண் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் குறைந்தபட்சம் 50 உறுப்பினர்கள் முதல் 1000 பேர் வரை உறுப்பினர்களாக இருக்கலாம்.

ரூ.1 கோடி கடன்

தொடர்ந்து சங்கம் 3 ஆண்டுகள் செயல்பட்டு, வரவு- செலவு கணக்குகளை தாக்கல் செய்தால் ரூ.1 கோடி வரை கடன் உதவி கிடைக் க வாய்ப்பு உள்ளது. இதற்கு எந்த ஜாமீனும் வேண்டியது இல்லை. தென்னை, கோ-கோ மற்றும் காய்கறி உற்பத்தி உள்ளிட்ட எந்த வேளாண் பொருளையும் விவசாயிகள் உற்பத்தி நிலையில் விற்பனை செய்தால் குறைந்த அளவே லாபம் கிடைக்கும்.

அதனை பொதுமக்கள் விரும்பி வாங்கும் வகையில் மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்றி சங்க உறுப்பினர்கள் ஒற்றுமையுடன் செயல்பட்டு அதிக லாபம் ஈட்ட முயற்சி மேற்கொள்ள வேண்டும். ஆனைமலை ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்திலும் விவசாயிகளுக்கு குறைந்த வட்டியில் கடன் உதவி, காப்பீடு, குளிர்பதன கிடங்கு, கொப்பரை ஏலம் உள்பட பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. எனவே விவசாயிகள் தொலைநோக்கு பார்வையுடன் செயல்பட்டு அரசு வழங்கும்

சலுகை மற்றும் மானியங்களை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

கூட்டத்தில் ஆனைமலை, வேட்டைக்காரன்புதூர், தாத்தூர், சின்னப்பம்பாளையம் உள்பட பல்வேறு பகுதிகளை சேர்ந்த 50-க்கும் மேற்பட்ட விவசாயிகள் கலந்து கொண்டனர்.

## கால்நடைகளை தாக்கும் நோய்களை தடுப்பது குறித்து ஆய்வுக்கூட்டம் கலெக்டர் தலைமையில் நடந்தது



தர்மபுரியில் நடந்த கால்நடை பராமரிப்பு துறை ஆய்வுக்கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசியபோது எடுத்தபடம்.

மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்கும் நோய்களை தடுப்பது குறித்து ஆய்வுக்கூட்டம் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடைபெற்றது.

ஆய்வுக்கூட்டம்

தர்மபுரி மாவட்ட கால்நடை பராமரிப்புதுறை சார்பில் மழைக்காலங்களில் கால்நடைகளை தாக்கும் நோய்களை தடுப்பது குறித்த சிறப்பு ஆய்வுக்கூட்டம் தர்மபுரி கலெக்டர் அலுவலகத்தில் கலெக்டர் விவேகானந்தன் தலைமையில் நடந்தது. இந்த கூட்டத்தில் மழைக்காலங்களில் பசு மற்றும் எருமைகளை தாக்கும் ஆந்தராக்ஸ்,

கோமாரி, சேற்றுப்புண், வைரஸ் காய்ச்சல் உள்ளிட்ட நோய்கள் குறித்து விளக்கி கூறினர். செம்மறி ஆடுகளுக்கு குடற்புழுக்களால் ஏற்படும் பாதிப்புகள் குறித்தும், வெள்ளாடுகளை தாக்கும் நோய்கள் குறித்தும் இவற்றிற்கான சிகிச்சை முறைகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. இந்த கூட்டத்தில் கலெக்டர் விவேகானந்தன் பேசியதாவது:-

மழைக்காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களை தடுக்க 32 சிறப்பு மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு உள்ளன. அனைத்து கிராம ஊராட்சிகளும் பயன்பெறும் வகையில் மேலும் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன. மழைக்காலத்தில் கால்நடை வளர்ப்போர் மேற்கொள்ள வேண்டிய உயிரி பாதுகாப்பு முறைகளான கொட்டகை சுகாதாரம், பிளீச்சிங் பவுடர் தெளித்தல், எருக்குழி அமைத்தல், கால்நடைகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் ஆகியவற்றை முறையாக மேற்கொள்ளவேண்டும்.

தடுப்பூசி

கால்நடைகளுக்கு நோய் பாதிப்புகளை தடுக்க தடுப்பூசிகளை உரிய காலத்தில் போட வேண்டும். ஏரி,குளங்கள் அருகே நீர்தேங்கிய புல்வெளிப்பகுதியில் கால்நடைகளை மேய்ப்பதை தவிர்க்க வேண்டும் போன்ற நடைமுறைகளை பின்பற்ற வேண்டும். இதுதொடர்பாக கால்நடை பராமரிப்புத்துறையினர் மருத்துவ முகாம்களில் எடுத்து கூறி விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். உரிய தகுதி இல்லாத நபர்கள் கால்நடைகளுக்கு மருத்துவ சிகிச்சை அளிப்பது தெரியவந்தால் சம்பந்தப்பட்டவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் இவ்வாறு கலெக்டர் பேசினார். இந்த ஆய்வு கூட்டத்தில் கால்நடை பராமரிப்புத்துறை மண்டல இணை இயக்குனர் ராமலிங்கம், துணை இயக்குனர் மாதேஸ்வரன், உதவி இயக்குனர்கள் ஜெகன்நாதன், இளங்கோ மற்றும் கால்நடை உதவி டாக்டர்கள், அரசு அலுவலர்கள் திரளாக கலந்து கொண்டனர்.

**கூட்டுறவு சங்கத்தில் ரூ.35 லட்சத்துக்கு பருத்தி ஏலம் 2,300 மூட்டைகள் குவிந்தன**

நாமக்கல் கூட்டுறவு சங்கத்தில் நேற்று 2,300 மூட்டை பருத்தி ரூ.35 லட்சத்துக்குஏலம்போனது.

பருத்திஏலம்

நாமக்கல் - திருச்செங்கோடு ரோட்டில் உள்ள வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்க வளாகத்தில் வியாழக்கிழமை தோறும் பருத்தி ஏலம் நடைபெற்று வருகிறது. வழக்கம்போல் நேற்று சங்க தலைவர் தென்னரசு மற்றும் கூட்டுறவு சங்க அதிகாரிகள் முன்னிலையில் பருத்தி ஏலம் நடந்தது. இந்த பருத்தி ஏலத்துக்கு நாமக்கல், புதுச்சத்திரம், எருமப்பட்டி, சேந்தமங்கலம், நாமகிரிப்பேட்டை, ராசிபுரம், பவித்திரம், வேலகவுண்டம்பட்டி என மாவட்டம் முழுவதும் இருந்தும், அண்டை மாவட்டங்களில் இருந்தும் விவசாயிகள் 2 ஆயிரத்து 300 மூட்டை பருத்தியை விற்பனைக்கு கொண்டு வந்து இருந்தனர். ரூ.35 லட்சத்துக்கு விற்பனை இந்த பருத்தி மூட்டைகள் ஏறத்தாழ ரூ.35 லட்சத்துக்கு ஏலம் போனது. ஆர்.சி.எச்.ரக பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு ரூ.3 ஆயிரத்து 889 முதல் ரூ.4 ஆயிரத்து 516 வரையிலும், டி.சி.எச் ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 967 முதல் ரூ.5 ஆயிரத்து 106 வரையிலும், சுரபி ரக பருத்தி ரூ.4 ஆயிரத்து 15 முதல் ரூ.4 ஆயிரத்து 311 வரையிலும் ஏலம் போனது. இந்த பருத்தி மூட்டைகளை கோவை, அவினாசி, திருப்பூர், திருச்செங்கோடு, கொங்கணாபுரம் உள்ளிட்ட பகுதிகளில் இருந்து வந்த வியாபாரிகள் ஏலம் எடுத்து சென்றனர்.

**ரூ.11 லட்சம் மதிப்பில் விவசாயிகளுக்கு வேளாண் கருவிகள் அமைச்சர் தங்கமணி வழங்கினார்**



நாமக்கல்லில் ரூ.11 லட்சம் மதிப்பிலான வேளாண் கருவிகளை அமைச்சர் தங்கமணி விவசாயிகளுக்கு வழங்கினார்.

வேளாண்கருவிகள்

நாமக்கல் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்கள் வழங்கும் விழா மற்றும் வேளாண்மை துறையின் சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் நெல் இயக்ககம் சார்பில் விவசாயிகளுக்கு "பவர்டில்லர்" வழங்கும் விழா ஆகியவை நாமக்கல் மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் நடைபெற்றது. இந்த விழாக்களுக்கு மாவட்ட கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமை தாங்கினார். நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.பி.பாஸ்கர், பரமத்தி வேலூர் சட்டமன்ற உறுப்பினர் தனியரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர். இவ்விழாக்களில் தமிழக தொழில்துறை மற்றும் போக்குவரத்துத்துறை அமைச்சர் தங்கமணி,

கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், விவசாயிகளுக்கு “பவர்டில்லர்”களையும்வழங்கினார்.

ரூ.5¼லட்சம்மானியம்

இதையொட்டி தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் மாற்றுத்திறனாளிகள் மற்றும் சுயதொழில் புரிந்துவரும் மாற்றுத்திறனாளிகள் என 13 மாற்றுத்திறனாளிகளுக்கு தலா ரூ.59 ஆயிரம் வீதம் ரூ.7 லட்சத்து 67 ஆயிரம் மதிப்பீட்டில் இணைப்பு சக்கரங்கள் பொருத்தப்பட்ட 13 பெட்ரோல் ஸ்கூட்டர்களையும், வேளாண்மைத் துறையின் சார்பில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தில் நெல் இயக்க திட்டத்தின் மூலம் 7 விவசாயிகளுக்கு ரூ.5 லட்சத்து 25 ஆயிரம் மானியத்துடன் ரூ.11 லட்சத்து 28 ஆயிரத்து 225 மதிப்பிலான 7 “பவர்டில்லர்”களையும் அமைச்சர் தங்கமணி வழங்கினார்

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் பழனிசாமி, இணை இயக்குநர் (வேளாண்மை) கார்த்திகேயன், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சுப்பிரமணியம், நாமக்கல் நகர்மன்றத் தலைவர் கரிகாலன், நாமக்கல் ஊராட்சி ஒன்றியக்குழுத் தலைவர் கவிதா சந்திரன், நாமக்கல் நகர்மன்றத் துணைத் தலைவர் சேகர் உள்பட உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், கூட்டுறவாளர்கள், வேளாண்மைத்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**கீழக்கலங்கல் பெரியகுளம் நிரம்பியது விவசாயிகள் மகிழ்ச்சி**



கருப்பாநதி தண்ணீர் மூலம் பாப்பான் கால்வாய் வழியாக வீரசிகாமணி பெரியகுளம், குலசேகரமங்கலம், நடுவக்குறிச்சி, ஈச்சந்தா, மேலக்கலங்கல், கீழக்கலங்கல் பெரியகுளம் ஆகிய ஊர்களில் உள்ள குளங்கள் நிரம்பி மறுகால் செல்கிறது. கீழக்கலங்கல் பெரியகுளம் நிரம்பி மறுகால் செல்வதை அறிந்த ஊர் மக்கள் திரண்டு மறுகால் விழும் பகுதிக்கு வந்தனர். அங்கு பூக்களை தூவி மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். மதகுகளுக்கு மாலை அணிவித்தனர்.